information

refugee action

working with refugees to build new lives

அவசரநிலை ஆதரவு டோக்கன் (EST) கிடைப்பதில் பிரச்னைகள் இருந்தால்

## சோடெக்ஸோ உதவித் தொடர்புக்கு

**01252 369 799**

எண்ணுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்

நீங்கள் அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய தகவல்:

1. காலையில் தொடர்பு கொள்ள முயலுங்கள்.அப்போது தொடர்பு கொள்வோர் குறைவாக இருக்கலாம்

2. நீங்கள் யாராவது ஒருவரிடம் பேசுவதற்கு அதிக நேரம் காத்திருக்க வேண்டியதிருக்கும். தொடர்பு இணைப்புகள் மூடப்பட்டுள்ளன என்றோ அல்லது சிறிது நேரம் கழித்துத் தொடர்பு கொள்ளுங்கள் என்றோ சொல்லப்படாத வரை தொடர்பைத் துண்டிக்காதீர்கள்

3. உங்கள் பெயர், பிறந்த தேதி, தேசிய புகலிட ஆதரவு சேவைக் குறிப்பு எண் மற்றும் முகவரியைத் தயார்நிலையில் வைத்திருங்கள்.இந்தத் தகவல் உங்களிடம் கேட்கப்படும்.

4. நீங்கள் அழைத்துப் பேசிய 48 மணி நேரத்துக்குள் உங்கள் அவசரநிலை ஆதரவு டோக்கன்கள் வழங்கப்பட வேண்டும். அவை வழங்கப்படும்வரை உங்கள் இருப்பிடத்தில் காத்திருங்கள்.தேசிய புகலிட ஆதரவு சேவைக் குறிப்பு எண்ணைத் தயார்நிலையில் வைத்திருங்கள். டோக்கன்களை வழங்க வருபவரிடம் அதைக் காட்டவும். நீங்கள் டோக்கன்கள் பெற்றதற்காக கையொப்பம் இடவும் வேண்டியதிருக்கும்.

5. டோக்கன்கள் 48 மணிநேரத்துக்குள் வழங்கப்படவில்லை என்றால் ஏதாவது ஒரு பிரச்னை இருக்கலாம். அப்படியெனில், ஓர் ஆலோசனை மையத்திற்குச் சென்று ஆலோசனை பெறுங்கள்.